# தமிழ் நாடு மாநில ஹஜ் குழு

**சென்னை–600 034.**

<u>ஹஜ் 2017–ற்கான விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்வதற்கான வழிமுறை</u>

<u>குறிப்பு:</u>விண்ணப்பப் படிவத்தை ஆங்கிலத்தில், பெரிய எழுத்துக்களில் மட்டும் பூர்த்தி செய்யவேண்டும். தயவு செய்து மைத்தாளை பயன்படுத்த வேண்டாம்.

<u>புகைப்படம்:</u> 3.5 செ.மீ. x 3.5 செ.மீ. பாஸ்போர்ட் அளவிலான, வெள்ளை நிற பின்னணியில் உள்ள சமீபத்தில் எடுக்கப்பட்ட இரு வண்ணப்புகைப்படத்தை உபயோகிக்கவேண்டும். ஒன்று விண்ணப்பத்திலும், மற்றொன்றை உறையில் (Cover) வைத்து அனுப்பி வைக்கவும்.

**1. சிறப்பு வகை–A (70+ வயது) / சிறப்பு வகை–B (தொடர்ந்து நான்காவது முறை ☐ / ஐந்தாவது முறை விண்ணப்பிப்பவர் ☐ /பொது வகையில் விண்ணப்பித்தல் ☐ :** உரிய கலத்தில் ☑ குறியிடவும்.

| | | | |
|---|---|---|---|
| (i) | <u>சிறப்பு வகை – அ</u><br>70+ வகைப் பயணிகள்.<br>(சக பயணியின் விவரங்களை அளிக்கவும்) | : | (i) சக பயணியின் முழுப்பெயரை எழுதவும் மற்றும்<br>(ii) சக பயணியின் உறவுமுறையினை எழுதவும். |
| (ii)<br>அ. | <u>சிறப்பு வகை – ஆ</u><br>நான்காவது முறை விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள்<br>(கடந்த மூன்று வருடங்களுக்கான உறை எண் மற்றும் பாஸ்போர்ட் எண் ஆகியவற்றை எழுதவும்) | : | நான்காவது முறை விண்ணப்பிக்கும் நபர்கள் ஹஜ் 2014, ஹஜ் 2015 மற்றும் ஹஜ் 2016–ற்கான உறை எண்களின் விவரங்களை உரிய கலத்தில் பூர்த்தி செய்யவும். |
| ஆ. | ஐந்தாவது முறை விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள்<br>(கடந்த நான்கு வருடங்களுக்கான உறை எண் விவரங்களை எழுதவும்) | : | ஐந்தாவது முறை விண்ணப்பிக்கும் நபர்கள் ஹஜ் 2013, ஹஜ் 2014, ஹஜ் 2015 மற்றும் ஹஜ் 2016–ற்கான உறை எண்களின் விவரங்களை உரிய கலத்தில் பூர்த்தி செய்யவும். (குஜராத், கேரளா, உத்தர்கான்ட், மத்திய பிரதேசம், டெல்லி, ஹரியானா, மஹாராஷ்டிரா மற்றும் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் மட்டும்) |

**2. தங்குமிட வகை** : விரும்பும் தங்குமிட வகையை ☑ குறியிடவும்.

i) பச்சை : பச்சை வகை தங்குமிடத்திற்கு விருப்பம் தெரிவித்தால் இக்கலத்தில் ☑ குறியிடவும்.

ii) அஜிஜியா : அஜிஜியா வகை தங்குமிடத்திற்கு விருப்பம் தெரிவித்தால் இக்கலத்தில் ☑ குறியிடவும்.

**3. உறைத் தலைமை நபரின் பெயர் (ஆண் மட்டும்)** : உறைத் தலைமை நபரின் பெயரை எழுதவும்.

**4. விண்ணப்பதாரரின் விவரங்கள் (பாஸ்போர்ட்டில் உள்ளவாறு)**

பாஸ்போர்ட் எண் : பாஸ்போர்ட்டின் எண்ணை எழுதவும்.

வழங்கப்பட்ட இடம் : பாஸ்போர்ட் வழங்கப்பட்ட இடத்தின் பெயரை எழுதவும்.

வழங்கப்பட்ட நாள் : பாஸ்போர்ட் வழங்கப்பட்ட தேதியினை எழுதவும்.

கால முடிவு நாள் : பாஸ்போர்ட் முடிவுறும் தேதியினை எழுதவும்.

பாலினம் : ஆண்/பெண் – பொருத்தமான கலத்தில் ☑ குறியிடவும்.

விண்ணப்பதாரரின்குடும்பப் பெயர் : விண்ணப்பதாரரின் குடும்பப் பெயரை எழுதவும்.

சூட்டப்பட்ட பெயர் : விண்ணப்பதாரரின் சூட்டப்பட்ட பெயரை எழுதவும்.

தந்தையின் பெயர் : பாஸ்போர்ட்டில் உள்ளவாறு தந்தையின் பெயரை எழுதவும்.

தாயின் பெயர் : பாஸ்போர்ட்டில் உள்ளவாறு தாயின் பெயரை எழுதவும்.

கணவன்/மனைவியின்பெயர் : கணவன்/ மனைவியின் பெயரை எழுதவும்.

பிறந்த தேதி : வயதை எண்களில் பூர்த்தி செய்யவும்.

பிறந்த இடம் : பிறந்த இடத்தினை எழுதவும்.

திருமண நிலை : திருமணமானவர்/திருமணமாகாதவர் பொருத்தமான கலத்தில் ☑ குறியிடவும்.

கல்வித் தகுதி : தங்களின் கல்வித் தகுதியை இக்கலத்தில் எழுதவும்.

தொழில் : இக்கலத்தில் தங்கள் தொழிலை எழுதவும்.

இரத்த வகை : இரத்த வகையினை குறிப்பிடவும்.

5. தற்போதைய வீட்டு முகவரி : வீட்டு முகவரியை அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் எழுதவும்.

மாவட்டம் : மாவட்டத்தின் பெயரை எழுதவும்.

மாநிலம் : மாநிலத்தின் பெயரை எழுதவும். அதாவது, TAMIL NADU என்று எழுதவும்.

கைபேசி எண் : ஹஜ் 2017 முடியும் வரையில் செயல்படக்கூடிய கைபேசி எண்ணை எழுதவும்.

இமெயில் : இமெயில் ID விவரத்தைத் தெரிவிக்கவும்.

**6. விண்ணப்பதாரரின் நியமனதாரர் விவரங்கள்:**
**(இந்தியா/சவூதி அரேபியாவில் அசம்பாவிதம் ஏதும் நேரிட்டால் தொடர்பு கொள்வதற்காக இந்தியாவில் நியமிக்கப்பட்ட நபரின் விவரங்கள்)**

பெயர் : இந்தியாவில் தாங்கள் யாரை நியமிக்க விரும்புகிறீர்களோ, அந்நபரின் பெயரை எழுதவும்.

நியமனதாரரின் தந்தை /கணவன் பெயர் : நியமனதாரரின் தந்தை/ கணவர் பெயரை எழுதவும்.

உறவுமுறை : நியமனதாரரின் உறவுமுறையை எழுதவும்.

தொலைபேசி/கைபேசி எண் : நியமனதாரரின் தொலைபேசி/கைபேசி எண்ணை எழுதவும்.

முகவரி : நியமனதாரரின் முகவரியை அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் எழுதவும்.

மாவட்டம் : நியமனதாரர் தங்கியிருக்கும் மாவட்டத்தின் பெயரை எழுதவும்.

மாநிலம் : நியமனதாரர் தங்கியிருக்கும் மாநிலத்தின் பெயரை எழுதவும்.

நியமனதாரரின் கையொப்பம்/ இடது கை பெருவிரல் ரேகை. : இக்கலத்தில் நியமனதாரரின் கையொப்பம்/ இடது கை பெருவிரல் ரேகை இடவும்.

7. மெஹ்ரமின் பெயர் மற்றும் உறவுமுறை (பெண் புனிதப் பயணிகளுக்கு மட்டும்)

கணவர் அல்லது இஸ்லாமிய சட்டத்தின்கீழ், இரத்த பந்தம் அல்லது பால்குடி பந்தம் அல்லது கணவரது வீட்டாரின் உறவுமுறை ஆகியவற்றின் காரணமாக பெண் பயணியுடன் மணம் புரிய அனுமதிக்கப்படாதவர் மெஹ்ரமாக கருதப்படுவார். ஹஜ் பயணம் மேற்கொள்கையில் பெண் பயணியின் வயது மற்றும் மணத்தகுதி எவ்வாறாக இருந்தாலும், அவருடன் மெஹ்ரம் இருக்கவேண்டும். மெஹ்ரம் என்பவர் வயது வந்த, முழுபுத்தி சுவாதீனமுடைய ஆணாக இருக்கவேண்டும். மெஹ்ரம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:–
(1) கணவர், (2) தந்தை, (3) மகன், (4) சகோதரன், (5) தந்தையின் உடன்பிறந்த சகோதரர் அல்லது தாயின் சகோதரர், (6) உடன்பிறந்தார் உறவு (Nephew) – சகோதரியின் மகன் மற்றும் சகோதரனின் மகன், (7) மாமனார், (8) மருமகன், (9) தாத்தா, மற்றும் (10) பேரன்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | மெஹ்ரமின் பெயரை எழுதவும். |
| உறவுமுறை | : | மெஹ்ரமின் உறவுமுறையை எழுதவும். |
| மெஹ்ரமுடைய பாஸ்போர்ட் எண் | : | மெஹ்ரமுடைய பாஸ்போர்ட் எண்ணை எழுதவும். |
| மெஹ்ரமின் கையொப்பம்/ இடது கை பெருவிரல்ரேகை. | : | இக்கலத்தில் மெஹ்ரமின் கையொப்பம்/ இடது கை பெருவிரல் ரேகை இடவும். |

8. ஏற்கனவே ஹஜ் பயணம் முடித்து மீண்டும் மெஹ்ரமாக அல்லது
70+ வயது பயணியுடன் துணைப்பயணியாக செல்பவரா? : ஆம் / இல்லை : தகுந்த கலத்தில் ☑ குறியிடவும்.

9. உறைத்தலைமை நபரின் வங்கிக் கணக்கு பற்றிய விவரங்கள். (வங்கி கணக்கு புத்தகத்தின் நகலினை இணைக்கவும்)

| | | |
|---|---|---|
| வங்கியின் பெயர் | : | வங்கியின் பெயரை எழுதவும் |
| கிளையின் பெயர் | : | வங்கிக் கிளையின் பெயரை எழுதவும். |
| கிளை குறியீடு | : | கிளைக் குறியீட்டு எண்ணை எழுதவும். |
| கணக்கு எண் | : | விண்ணப்பதாரரின் வங்கிக் கணக்கு எண்ணை எழுதவும். |
| **IFS** குறியீடு | : | **IFS** குறியீட்டு எண்ணை எழுதவும். |

10. இஸ்லாமிய வளர்ச்சி வங்கியின்(**IDB**) மூலமாக
அதாஹி (குர்பானி) மேற்கொள்ள விருப்பமுள்ளவரா: ஆம் / இல்லை : தகுந்த கலத்தில் ☑ குறியிடவும்.
**(உறைத்தலைவர் தெரிவிக்கும் விருப்பம் உறையிலுள்ள மற்ற நபர்களுக்கும் பொருந்தும்)**

11. ஹஜ் வழிகாட்டி புத்தகம் எந்த மொழியில் வேண்டும் என்பதை குறிக்கவும் (டிக் செய்யவும்):-

| ஆங்கிலம் | உருது | தமிழ் |
|---|---|---|

12. தாங்கள் வெளிநாட்டில் தங்கியிருக்கும் இந்தியரா ? ஆம் / இல்லை : தகுந்த கலத்தில் ☑ குறியிடவும்.

13. ஜோஃபாவை மீகாத் எல்லையாக விருப்பம் தெரிவிக்கும் பயணிகள்: தகுந்த கலத்தில் ☑ குறியிடவும்.
(இக்கலம் ஷியா புனிதப் பயணிகளுக்கு மட்டும்)

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரரின் கையொப்பம்/ இடது பெருவிரல் ரேகை | : | இக்கலத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம்/இடது கை பெருவிரல் ரேகை இடவும். |

<u>முக்கியக் குறிப்புகள்:</u>

(i) தங்களின் உறையில் குழந்தை ஏதேனும் இருப்பின், குழந்தைக்கான விவரங்களை தனி விண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி செய்யவேண்டும். ஒரு உறையில் இரண்டு வயது பூர்த்தியடையாத <u>இரு குழந்தைகள் மட்டும்</u> அனுமதிக்கப்படுவர்.

(ii) விண்ணப்பங்களை அனைத்து வகையிலும் சரியாக பூர்த்தி செய்து விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி தேதிக்குள் அதாவது 24–01–2017–ற்குள் தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்கு பின்வருவனவற்றுடன் சமர்ப்பிக்க வேண்டும்:–

(1) முகவரிச்சான்று : பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றின் ஒரு நகல்.

(அ) குடும்ப அட்டை (ஆ) ஓட்டுநர் உரிமம்
(இ) மின் கட்டண அட்டை (ஈ) தொலைபேசி கட்டண அட்டை (தரைவழி தொடர்பு)
(உ) குடிநீர் கட்டண அட்டை (ஊ) எரிவாயு இணைப்பு ரசீது
(எ) வாக்காளர் அடையாள அட்டை (ஏ) வருமான வரி மதிப்பீடு ஆவணம்
(ஐ) வங்கி கணக்கு புத்தகம் (ஒ) ஆதார் அட்டை
(ஓ) அரசு அலுவலகத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை

(2) சிறப்பு வகை ஒதுக்கீட்டில் வரும் பயணிகள் ஒரிஜினல் பாஸ்போர்ட் மற்றும் அதன் ஒரு நகல்.

(3) சுயகையொப்பமிட்ட குறைந்தது 28.2.2018 வரையில் செல்லத்தக்க கணினி வழி பதிவு செய்யக்கூடிய (machine readable) பாஸ்போர்ட்டின் ஒரு நகல்.

(4) காசோலை/வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒரு நகல்.

(5) பணம் செலுத்திய ரசீது (HCOI copy) மற்றும் அதன் ஒரு நகல்.

(6) உறுதி மொழி

---